# மே – 18 – வெள்ளி

**புனித முதலாம் அருளப்பர் திருத்தந்தை**

**யோவானின் மகனான சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகின்றாயா? (யோவா.21:16)**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 25 : 13 – 21

அக்காலத்தில் அகிரிப்பா அரசனும், பெர்னிக்கியுவும் பெஸ்தைச் சந்திக்கச் செசரியா வந்தனர். அவர்கள் பலநாள்கள் அங்கு தங்கியிருந்தபோது பெஸ்து பவுலுக்கு எதிரான வழக்கை அரசனிடம் எடுத்துக்கூறினார் "பெலிக்சு கைதியாக விட்டுச்சென்ற ஒரு மனிதர் இங்கு இருக்கிறார்.நான் எருசலேமிலிருந்தபோது தலைமைக் குருக்களும், யூதரின் மூப்பர்களும் அவரைப்பற்றிய வழக்கை என்னிடம் தெரிவித்து அவருக்கு எதிராகத் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.நான் அவர்களைப் பார்த்து, "குற்றம் சாட்டப்பட்டவர் எவரும் குற்றம் சாட்டியவர்க்கு முன் நின்று தம்மீது சுமத்தப்பட்ட குற்றத்தைப் பற்றி விளக்குவதற்கான வாய்ப்பைப் பெறவேண்டும். அதற்குமுன் அவருக்குத் தீர்ப்பு அளிப்பது உரோமையரின் வழக்கமல்ல" என்று கூறினேன்.எனவே அவர்கள் இங்கே வந்தபோது, சற்றும் காலம் தாழ்த்தாமல் மறுநாளிலேயே நான் நடுவர் இருக்கையில் அமர்ந்து அவரை என்னிடம் கூட்டிக்கொண்டு வருமாறு ஆணை பிறப்பித்தேன்.குற்றம் சுமத்தியவர்கள் எழுந்து பேசியபோது நான் நினைத்திருந்த கொடிய குற்றம் எதுவும் அவர்மீது சுமத்தவில்லை.அவர்கள் அவருக்கு எதிராகச் சொன்னதெல்லாம் தங்கள் சமயத்திலுள்ள சில கருத்து வேறுபாடுகளாகத்தான் இருந்தன. இறந்துபோன இயேசு என்னும் ஒருவரைப் பற்றியும் அவர்கள் பேசினார்கள். இந்த இயேசு உயிரோடு இருப்பதாக பவுல் சாதித்தார். இக்கருத்துச்சிக்கல்களைப் பற்றிக் கேட்டதும் நான் குழம்பிப்போய், "நீர் எருசலேமுக்கு வருகிறீரா? அங்கு இவை பற்றி விசாரிக்கப்பட விரும்பகிறீரா?" எனக்கேட்டேன்.பவுல், பேரரசரே விசாரித்துத் தீர்ப்பு அளிக்கும் வரை தம்மைக் காவலில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆதலால் இவரைச் சீசரிடம் அனுப்பும்வரை காவலில் வைக்குமாறு ஆணை பிறப்பித்தேன்."

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது அரியனையை விண்ணகத்தில் நிலைநிறுத்தியுள்ளார்.

## நற்செய்தி : யோவான் 21 : 15 - 19

இயேசு தம்சீடர்களுக்குத் தோன்றி சீமோன் பேதுருவிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்றுகேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்" என்றார்.இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளை மேய்" என்றார்.மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று கேட்டார். "உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று இயேசு மூன்றாம்முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், "ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?"" என்றார். இயேசு அவரிடம், ""என் ஆடுகளைப் பேணிவளர்."நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடிவந்தாய். உனக்கு முதிர்ந்தவயது ஆகும்போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவர் உன்னைக் கட்டி, உனக்கு விருப்பம் இல்லாத இடத்திற்குக் கூட்டிச்செல்வார் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்"பேதுரு எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப்படுத்தப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்ன பின் பேதுருவிடம், "என்னைப் பின் தொடர்" என்றார்.

**தியானம்:** "வானின்று ஆண்டவர் பார்க்கின்றார், மானிடர் அனைவரையும் காண்கின்றார். தாம் வீற்றிருக்கும் இடத்திலிருந்து உலகெங்கும் வாழ்வோரைக் கூர்ந்து நோக்குகின்றார். தமக்கு அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காக காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார்" (திபா 33:13,18). இந்த உலகத்திலே கடவுளை அன்பு செய்யக்கூடிய பிள்ளைகளை, கடவுளின் பிரசன்னத்திற்காக ஏக்கத்தோடு காத்திருக்கும் பிள்ளைகளை ஆண்டவர் இயேசு இதய வாஞ்சையோடு தேடிக்கொண்டிருக்கின்றார். "இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கின்றேன்" (திவெ.3:20) என்று சொல்லி, நம் இதயக் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்தைக் கேட்டு அவருக்காக இதயத்தைத் திறந்து கொடுக்கும் மனிதர்கள் நம்மில் எத்தனைபேர்? இன்றைய நாளிலும் கூட ஆண்டவர் இயேசு தான் மிகவும் அன்பு கூர்ந்த பேதுருவைப் பார்த்து மூன்று முறை கேட்கின்றார், யோனாவின் மகனான சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா? எல்லோரும் ஓடிப்போய்விட்டாலும் நான் அவ்வாறு செய்யமாட்டேன், நான் உம்மோடு இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை நான் ஒருபோதும் மறுதலிக்கமாட்டேன் (மாற் 14:29,31) என்று இயேசுவிடம் வாக்குறுதி கொடுத்த பேதுரு, ஒரு பெண்ணினுடைய வார்த்தைக்குப் பயந்து, படைவீரர்களுடைய மிரட்டலுக்குப் பயந்து, தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இயேசுவைத் தெரியவே தெரியாது என்று மறுதலித்த பலவீனமான பேதுருவைப் பார்த்து இயேசு கேட்கின்றார், நீ என்னை அன்பு செய்கின்றாயா? என்று. இயேசுவை அன்பு செய்வது, இயேசுவை பின் தொடர்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இயேசுவை அன்பு செய்வது, சோதனைகளையும், வேதனைகளையும் அவருக்காக தாங்கிக் கொள்ள முன்வருவது. "குழந்தாய் ஆண்டவருக்குப் பணிபுரிய நீ முன்வந்தால் சோதனைகளை எதிர்கொள்ள முன்னேற்பாடு செய்துகொள்" (சீரா.2:1). யோனாவின் மகனான சீமோனே என்ற இடத்தில் நமது பெயர்களை அழைத்து நீ என்னை அன்பு செய்கின்றாயா? என்று இயேசு நம்மிடம் கேட்டால் நாம் என்ன பதில் சொல்லப் போகின்றோம். பேதுரு சொன்னார், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே" என்று. நாம் அவ்வாறு சொல்ல முடியுமா இயேசுவே நான் உம்மை அன்பு செய்கின்றேன், அது உமக்குத் தெரியும் என்று?